## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | செல்லபாண்டியன் | -- | |
| Father's Name | சேரன் | Calling | முதல்நிலை காவலர் |
| Village | கல்லுப்பட்டி | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of January 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் ராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி மணிராஜ் தெற்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தார். அவருடன் நானும், முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது 24.09.2022ம் தேதி மாலை 06.30 மணிக்கு ராஜபாளையம்–தென்காசி மெயின்ரோட்டில் என் டி ஆர் சூப்பர் மார்க்கெட் அருகில் சுமார் 60 நபர்கள் நரிக்குறவர், குருவிக்காரர் பிரிவினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாகவும் அதே நேரத்தில் குறவர் இனம் வேறு குருவிக்காரர் இனம் வேறு என்றும் அவர்களை தனித்தனியாக சேர்க்கப்பட்டதை போன்று குறவர் இனத்தையும் சேர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக போராட்டம் ஆர்ப்பாட்டம் செய்து மறியல் செய்துக்கொண்டிருந்தார்கள். அதனால் அங்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அப்போது அங்கு பணியிலிருந்த வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மூவேந்திரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமை காவலர் மாரிபூபதி, முதல்நிலை தங்கஸ்வரன் ஆகியோர்களுடன் நானும் தெற்கு காவல் நிலைய தலைமை காவலர் மணிராஜ், ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர்கள் சேர்ந்து போராட்டம் செய்தவர்களை பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது அதனால் கலைந்து செல்லுங்கள் என்று கூறினோம். அவர்களை பற்றி விசாரித்த போது சஞ்சய், காளிராஜ், கடற்கரை, ராம்குமார், முத்துபாண்டி, சண்முகவேல், ராஜா, பூமிராஜா, ஞானசேகர், முருகன், சஞ்சீவி ராஜ், ஈஸ்வரன், பேச்சிமுத்து என்றும் தெரியவந்தது. மேற்படி நபர்கள் பாம்பே லாட்ஜ் அருகில் மாலை 7 மணியளவில் சட்ட விரோதமாக கூடி கைகளில் கற்களுடன் நின்றனர். அவர்களில் காளிராஜ், முத்துபாண்டி, முருகன் ஆகியோர்கள் என்னையும் மணிராஜ் என்பவரையும் பார்த்து போலீஸ்கார தேவடியா மகன்களா, கூதி மகன்களா என்று அசிங்கமாக பேசினார்கள். அப்போது பணியிலிருந்த மூவேந்தரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமை காவலர்கள் மாரி பூபதி,

மணிராஜ், முதல்நிலை காவலர் தங்கஸ்வரன், ஆயுதப்படை காவலர் ஆன்நதராஜ் ஆகியோருடன் நானும் சேர்ந்து அவர்களிடம் ஏன் இப்படி தேவை இல்லாமல் பிரச்சனை செய்கிறேர்கள் உடனே ஓரமாக போகுங்கள் என்று கூறினோம். அப்போது சஞ்சீவி ராஜ், முத்துபாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து ஆகியோர்கள் அப்படித்தான் நாங்கள் மறியலில் ஈடுபடுவோம் என்று கூறி அவர்கள் கைகளில் வைத்திருந்த கற்களால் இதோடு செத்து தொலைங்கடா என்று சொல்லி கற்களை மாறி மாறி என் மீதும் மணி ராஜ் மீதும் வீசினார்கள். நாங்கள் சற்று விலகி கொண்டோம். அவ்வாறு விலகாவிட்டால் கற்கள் பட்டு செத்துபோயிருப்போம். அப்போது அங்கு பணியிலிருந்த போலீஸ்காரர்களாகிய நாங்கள் குறைந்தபட்ட பலபிரயோகம் உபயோகித்து அவர்களை போக்சொன்னோம். இந்த சம்பவத்தினால் எனக்கு வலது காலில் காயம் ஏற்பட்டுவிட்டது. மணி ராஜ் என்பவருக்கு இடது பக்க தலை, வலது கை முட்டி மற்றும் இடது பக்க தோள்பட்டைக்கு கீழ் மற்றும் பல இடங்களில் வலி ஏற்பட்டது. அப்போது போராட்டாக்கார்களில் காளிராஜ், சண்முகவேல் ஆகியோர்கள் மறியலில் ஈடுபட்ட நபர்களை அங்கிருந்து அழைத்து சென்றார். அவர்கள் போகும்போது எங்கள் சாதிக்காரங்க அரசாங்கத்தை எதிர்த்து எந்தவித கோரிக்கையும் வைப்போம். அதற்கு யார் தடை செய்தாலும் போலீஸாக இருந்தாலும் வெட்டி கொலை செய்துவிடுவோம் என்று சொல்லி மிரட்டினார்கள். அந்த சமயத்தில் தெரு விளக்கு வெளிச்சம் இருந்தது. இந்த சம்பவமானது அங்கு பூர்விக மொபைல் கடை அருகில் இட்லி கடை வைத்திருக்கும் கிறிஸ்டோபர் என்பவருக்கும் ஆனந்தா சைவ ே◌ஹாட்டல் அருகில் பீடா கடை வைத்திருக்கும் சிவராமன் என்பவருக்கும் தெரியும். காயப்பட்ட என்னையும் மணிராஜ் என்பவரையும் ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் அவர்கள் அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் எங்களை சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார். நாங்கள் சிகிச்சையிலிருந்தபோது வடக்கு காவல் நிலைய தலைமை காவலர் திருப்பதிராஜ் என்பவர் எங்களை விசாரித்தார். அப்போது அவரிடம் மணிராஜ் ஒரு புகார் மனு கொடுத்தார். எதிரிகள் எங்களை கற்களால் தாக்கினார்கள். அந்த கற்களை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அவைகள் ஏற்கனவே சாபொ1 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

போராட்டம் நடந்த இடத்திலிருந்து காந்தி சிலை சிக்னல் பார்த்தால் தெரியும் என்றால் தெரியாது. போராட்டம் நடந்த இடத்திலிருந்து காந்தி சிலை சிக்னல் வளைவான பகுதி என்றால் சரிதான். போராட்டம் நடந்த இடத்திலிருந்து 5 நிமிடத்தில் எங்கள் காவல்நிலையத்திற்கு சென்றுவிடலாம் என்றால் நடந்து சென்றால் 10 நிமிடம் ஆகும். போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போதுதான் அந்த இடத்திற்கு நான் சென்றேன். நானும் மணி ராஜ் மட்டும் அப்போது சென்றோம். மற்ற போலீசார் எங்களுக்கு முன்பே சென்றுவிட்டார்கள். அவர்கள் எப்போது அந்த பகுதிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போராட்டம் சுமார் முக்கால் மணி நேரம் நடந்தது. அந்த முக்கால் மணி நேரம் போக்குவரத்து நின்றுவிட்டது. இதே கோரிக்கையை வலியுறுத்தி மலையடிப்பட்டியில் உண்ணாவிரதம் நடந்தது எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முதல்நாள் இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் போராட்டம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன

தேதியில் எந்தவித போராட்டமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த நேரத்தில் அந்த பகுதியிலுள்ள கண்காணிப்பு கேமராக்களை பார்த்தால் நான் சொன்னதுபோல போராட்டம் நடந்தது என்பது தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of January 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**